V.K

# விசுவலிங்க வெண்பா



ஆக்கம்: சைவதுரந்தரர் கவிநாயகர்

வி. கந்தவனம்

22-12-2012

உ

சிவ சிவ

# விசுவலிங்க வெண்பா

ஆக்கம்: சைவதுரந்தரர் கவிநாயகர்

வி. கந்தவனம்

வெளியீடு: இந்துசமயப் பேரவை

22-12-2012

# பதிப்புரை

சைவசமயம் உலகில் உள்ள சமயங்களில் தொன்மையான உயர் நெறிகளை தன்னகத்தே கொண்ட சமயம் ஆகும். சைவ சித்தாந்தம் சைவ சமயத்தின் உயர் கருத்துக்களை தத்துவங்களை விளக்குகின்றது.

பல பிரிவுகளாகப் பிரிந்திருந்த சைவ சமயத்தையும் சிவ வழிபாட்டையும் வாழ்வியல் சமயம் ஆக்கிய பெருமை சமய குரவர்களைச் சாரும். தமிழர் கண்ட பெரு நெறியாகிய சைவ சித்தாந்தத்தை வாழ்வியல் சித்தாந்தமாக வளர்த்தெடுத்த பெருமை ஈழத்தமிழர்களுக்கு உண்டு. குறிப்பாக யாழ் குடா நாட்டில் வாழும் எமது மக்கள் சைவ சித்தாந்தத்தை வாழ்வியல் நெறியாகக் கொண்டவர்கள்.

எமது மக்கள் நாவலர் பெருமான் காட்டிய வழியில் வாழ்பவர்கள். அவருடைய மரபையே பின்பற்றிச் சைவத்தைப் பேணுபவர்கள்.

சைவ சமயிகளாக வாழ்ந்து சைவ சமயத்தை காக்கும் பெருமை காரைநகர் மண்ணுக்கு உண்டு. அவர்களுடைய இறுக்கமான சைவசமயப் பற்று ஈழத்துச் சிதம்பரமான நடராசப் பெருமானின் அருட்கடாட்சம் என்று அடியேன் கருதுகின்றேன்.

காரைநகர் மக்களின் உணர்விலே சைவ சமயப் பற்று ஆழமாக வேர் ஊன்றியதற்கு என்ன காரணம் என்று சிந்திக்கும் பொழுது, மகான் அருணாசலம் ஆசிரியர் அவர்கள் பிறந்து சைவசமயப் பணியாற்றியமையும், சிவதிரு. வைத்தீசவரக் குருக்கள் அவர்களின் வழிகாட்டலுமே காரணமாகும். அவர் தாபித்த மணிவாசகர் மன்றம் 60 வருடங்களுக்கு மேலாக காரைநகரில் சைவசமயத்தைப் பேணி பாதுகாத்து வருகின்றது.

இந்த மண் பெற்றெடுத்த தவப் புதல்வாரன சைவப் பெரியார், சிவநெறிக்காவலர் தி. விசுவலிங்கம் அவர்கள். அவர் கனடாவில் மிசிசாக மாநகரில் சைவ சித்தாந்த மன்றத்தை அமைத்துப் பல வருடங்களாக பெரும் பணியாற்றி வருகின்றார்.

அவர் செய்யும் பணிகளில் போற்றுதலுக்குரிய பணிகள்

இரண்டு தமிழ்ச் சிறார்களுக்கு சைவத்தையும் தமிழையும் கற்பித்தலும், மாதாந்தம் அன்புநெறி என்ற சஞ்சிகையை வெளியிடுதலுமாகும். இவருடைய பணிகளுக்கு இவரின் துணைவியார் வடிவழகாம்பாள் விசுவலிங்கம் அவர்களும் வலது கரமாகச் செயற்படுகின்றார். அவரிடத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் பல வருடங்களாக கொழும்பு விவேகானந்த சபை நடத்தும் சைவசமய பாடப்பரீட்சையில் தோன்றி விசேட சித்திகளைப் பெறுகின்றனர். அத்துடன் திருவாசகத்தை பெரியவர்களுடன் சேர்ந்து முற்றோதும் தெய்வீக ஆற்றலும் இவருடைய மாணவர்களுக்கு உண்டு.

சைவ சித்தாந்த மன்றம் ஊடாக சைவ சமயத்தை வளர்ப்பதுடன் சைவ சமயியாக வாழ்பவர், வாழ்ந்து காட்டுபவர் சைவப் பெரியார் தில்லையம்பலம் விசுவலிங்கம் அவர்கள்.

பல உயர்வு சிறப்புக்களுக்குக் கர்த்தாவாகிய சிவநெறிக் காவலர் அவர்கள் தற்பொழுது பவளவிழாக் காண்கிறார். அவருடைய பவளவிழாவை முன்னிட்டு எங்கள் பேரவையின் தலைவர் சைவத் துரந்தரர் கவிநாயகர் கந்தவனம் ஐயா அவர்கள் "விசுவலிங்க வெண்பா" என்ற சிற்றிலக்கிய நூலை எழுதியுள்ளார். இந்நூல் ஒன்ராரியோ இந்து சமயப் பேரவையின் வெளியீடாக வெளிவருகின்றது.

கனடாவில் சைவசமய விழுமியங்களைக் காக்கும் பெரியார் அவர்களின் பணியை பிரதிபலிக்கும் இந்நூலை வெளியிடுவதில் பேரவை மகிழ்ச்சி அடைகின்றது.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய அதிபர் த. சிவபாலு அவர்களுக்கும் பேரவை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

சிவ. முத்துலிங்கம்
செயலாளர், நூல்வெளியீட்டுப் பொறுப்பாளர்
ஒன்ராரியோ இந்து சமயப் பேரவை

முன்னாள் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்
திரு. த. சிவபாலு, B.Ed.(Hons.), M.A.,
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

கனடிய மண்ணில் தமிழுக்காகவும் சைவத்துக்காகவும் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்துவருபவர் திரு. திருமதி விசுவலிங்கம் தம்பதியராவர். இப்புவியில் பிறந்தமை தொண்டாற்றவே என்பதனை நன்கு உணர்ந்து செயற்பட்டு வரும் அப்பெருமக்களோடு கடந்த பன்னிரு ஆண்டுகளுக்கு மேலாகப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது தெய்வ சித்தம்.

திரு. விசுவலிங்கம் அவர்களும் திருமதி வடிவழகாம்பாள் அவர்களும்

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
> பண்பும் பயனும் அது

என்னும் பொய்யாமொழிப் புலவரின் வாக்கை அடியொற்றி வாழப் பிறந்தவர்களோ அல்லது அவர்களுக்காகத்தான் இந்தக் குறளை வள்ளுவர் பெருமான் பாடினாரோ என்று எண்ணும் வகையிலே அவர்கள் வாழ்ந்து வருவது எமது நெஞ்சத்தில் நிலையாக இடம்பெற்றுள்ள நிதர்சனம்.

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்பதனை உணர்ந்து தம்வாழ்விலே கற்றவைகளினதும் கேட்டவைகளினதும் மெய்ப்பொருளை ஆராய்ந்து கண்டு அவ்வழி வாழ்ந்துவரும் அருமையும் பெருமையும் மிக்கத் தம்பதியர் இன்சொல், இனித்த முகம், அன்புப் பார்வை ஆகியவற்றால் அனைவரையும் அணைத்துப் பழகிவரும் பண்பாளர்.

"நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று அல்லும் பகலும் இறைவனை வேண்டிப் பணிந்து பாடிச்

செய்யும் பணிகளில் தாம் பெறும் அனுபவம், இன்பம் அனைத்தையும் மனித்தப்பிறவி எடுத்தவர்கள் அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் உயரிய நோக்கம் உள்ளவர்கள். இந்த மண்ணில் பிறந்தார்க்கு யாது செய்தீர் என்ற வினாவுக்கு விடையிறுக்கும் நோக்கமும் உள்ளவர்களாக முதியோரையும் இளைய தலைமுறையினரையும் தம்பாற் கவர்ந்து கல்வியூட்டுவதில் இன்பம் காணும் துடிப்பும் ஆர்வமும் கொண்டவர்களாக அவர்கள் செயற்படுவது என்னை வியக்க வைத்துள்ளது.

என்னிலும் அதிகம் நெருக்கமாக உறவாடி அவர்களுடன் பழகிவருபவர் கவிநாயகர் அவர்கள். அவர்களது புனித தொண்டுகளைக் கண்டும் கேட்டும் அதிகம் அனுபவித்தவர் அவர். அந்த வகையில் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட சைவப்பெரியார் அவர்களின் 75 அகவை வாழ்க்கையின் சிறப்பைச் சங்கப் புலவர் மரபுவழி கார்நாற்பது, களவழி நாற்பது, இன்னா நாற்பது. இனியவை நாற்பது போன்று நாற்பது வெண்பாக்களில் சுருக்கமாகவும் சுவையாகவும் பாடியிருப்பது சைவப்பெரியார் செய்த புண்ணியமே.

வாழும்போது வாழ்த்தவேண்டும்! சங்கப் புலவர்கள் தாம் வாழுங் காலத்து மன்னர்களையும் கொடை வள்ளல்களையும் பாடியுள்ளனர். அந்த மரபைப் பின்பற்றி கவிநாயகர் அவர்கள் அண்மையில் விபுலாநந்த அடிகளாரைப் பற்றிப் போற்றிப் பாடியிருப்பதைப் போன்று சைவப் பெரியார் ஆசிரியமணி திரு. தி. விசுவலிங்கம் அவர்களின் சேவைச் சிறப்புகளை "விசுவலிங்க வெண்பா" என்னும் நூலில் விளக்கி அதனை அவரது பவளவிழாவில் அரங்கேற்றுவது பாராட்டப்படவேண்டியது.

காலத்தின் தேவையும் தகுதியும் உரிமையும் கலந்த இந்தக் கவிதை நூல் எம்மையெல்லாம் சங்க இலக்கியச் சுவையை உண்டு களிக்குமாறு தூண்ட வைத்திருப்பது கவிநாயகரின் புலமைச் சிறப்பேயாகும்.

முதலிலேயுள்ள இறைவணக்கப் பாடல்கள் கவிநாயகரது குலதெய்வம் பிள்ளையாரினதும் பாடப்படுபவராகிய சைவப்பெரியார் விசுவலிங்கம் அவர்களின் குலதெய்வமாகிய திண்ணபுரத்தீசனதும்

அருளை வேண்டுவதாக அமைந்துள்ளன. திண்ணபுரத்து இறைவணக்கப் பாடல் இது.

காரைநகரத் திண்ணபுரக் கண்ணுதலே நின்னடியான்
வீரவினைச் சைவர் விசுவலிங்க – பேராசான்
தன்னுயர்வை வெண்பாவில் சாற்றத் தலைப்பட்டேன்
நின்னருளை நெஞ்சில் நினைந்து.

கவிநாயகர் தனது கவிதை மரபிலே நாட்டுச் சிறப்பை மிகவும் நயந்து வியந்து குறிப்பிட்டுள்ளமை அதன் சிறப்புப் பாயிரமாகவே அமைகின்றது. பின்வரும் இரு பாடல்களில் காரைநகரச் சிறப்பையும் அங்குள்ள ஈழத்துச் சிதம்பரம் எனப்போற்றப்படும் சிவத்தலத்தின் சிறப்பையும் சுருக்கமாகத் தந்துள்ளமை சுவையாகவுள்ளது.

தில்லைச் சிதம்பரத்தை ஒத்த திருப்பதியாம்
கல்லும் கனியாகும் காரைநகர் – சொல்லுதிரு
திண்ணபுரந் தன்னில் சிவபெருமான் வீற்றிருந்து
தண்ணருள்செய் மேன்மைத் தலம். (1)

கூவாமற் கூவும் குயில்கள் குரலோசை
தேவாரம் போல்நன்கு தித்திக்கும் – நாவார
பேசும் கிளிக்கூட்டம் பெம்மான் புகழ்தென்றல்
வீசும் அருள்ஞான மே. (2)

பாட்டுடைத் தலைவரின் பிறப்பின் சிறப்பினைக் கவிநாயகர் எடுத்த எடுப்பிலேயே,

இவ்வூர் இலகடியார் ஏத்தும் வலந்தலையில்
செவ்வேள் விசுவலிங்கச் செம்மனத்தார் – இவ்வுலகில்
பேரருளால் வந்து பிறந்தார் சிவபெருமான்
சீர்பரவ என்றே தெளி. (5)

என்று தெளிவாக்குவதையும் கவனித்தல் வேண்டும்.

நீறுபூத்த நெற்றியராய்க் காட்சிதரும் பாட்டுடைத்

தலைவரின் மேன்மையைக் கூறப்போந்த ஆசிரியர் அவரது தோற்றத்தை அப்படியே பின்வரும் செய்யுளில் அச்சொட்டாகப் படம்பிடிக்கின்றார்:

நீறிருக்கும் நெற்றியிலே நெஞ்சத்தில் அன்பென்னும்
ஆறாறி மாணவரை ஆளாக்கும் – பேறெனவே
ஆசிரிய மேன்மைத் தொழிலுக் கழகுசெய்யும்
வாசமலர் ஆனார் மகிழ்ந்து. (11)

அத்தோடு சைவப்பெரியாரின் செய்பணியின் சிறப்பும் இச்செய்யுளிற் பேசப்படுகின்றது.

விசுவலிங்க வெண்பா சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தது. நாற்பது பாடல்களுக்குள் ஒருவரின் கல்வி, தொழில், பொதுப்பணிகள், குணவியல்புகள் மற்றும் குடும்பச் சிறப்புகள் என்பவற்றை அடக்குவதற்குத் தனித்திறமை வேண்டும். அது கவிநாயகர் இடத்தில் நிறையவே இருக்கிறது என்பதனை இந்நூல் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

இது ஒரு வரலாற்று நூல் என்றாலும் சொல்வதைச் சுருக்கமாகவும் சுவைபடவும் கவிஞர் சொல்லியிருக்கின்றார். கற்பனைக்கும் குறைவில்லை. உவமை நயங்களுக்கும் ஊறுகாய்போல நாவூற வைக்கின்றன. ஓர் உதாரணம்:

குற்றுயிர்க்கு நன்மருந்தோ கும்மிருட்டுச் சூரியனோ
வற்றும் குளத்துக்கு மாமழையோ – உற்றசிவ
வேதம் வளர்க்கும் விசுவலிங்கர் தொண்டுக்கிங்(கு)
ஏதோ உரைப்பன் எதிர். (35)

கடினமான சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்திருப்பது நூலை நன்கு விளங்கிக்கொள்ள மிகவே உதவுகின்றது.

பாட்டுடைத் தலைவரையும் நூலாசிரியரையும் பாராட்டுவோம்; பல்லாண்டு வாழ வாழ்த்துவோம்!

-------

# விசுவலிங்க வெண்பா

## கடவுள் வணக்கம்

அரிய செயற்கருளும் ஆனைமுக வையா
இரவிமக னார்விசுவ லிங்கப் – பெரியாரை
வெண்பாவில் ஏற்ற விழைகின்றேன் எந்தனுயிர்
நண்பாநின் தண்பார்வை நாட்டு.

(இரவி – சூரியன். மகனார் – மகனுக்கரிய மரியாதைப் பன்மை.)

காரைநகர்த் திண்ணபுரக் கண்ணுதலே நின்னடியான்
வீரவினைச் சைவர் விசுவலிங்க – பேராசான்
தன்னுயர்வை வெண்பாவில் சாற்றத் தலைப்பட்டேன்
நின்னருளை நெஞ்சில் நினைந்து.

(கண்ணுதலே – நெற்றிக் கண்ணையுடைய சுந்தரேசுவரப் பெருமானே.)

## அவையடக்கம்

காலமெல்லாம் கல்வி வளர்ச்சிக்குக் கைகொடுத்த
மேலவராம் நண்பர் விசுவலிங்கச் – சீலர்திறம்
பற்றியான் பாடுகின்றேன் வெண்பாவில் பாவலர்கள்
குற்றம் பொறுத்தல் குணம்.

## நூல்

தில்லைச் சிதம்பரத்தை ஒத்த திருப்பதியாம்
கல்லும் கனியாகும் காரைநகர் – சொல்லுதிரு
திண்ணபுரந் தன்னில் சிவபெருமான் வீற்றிருந்து
தண்ணருள்செய் மேன்மைத் தலம். (1)

(ஈழத்துச் சிதரம்பரம், திண்ணபுரம் என்பன காரைநகரின் சிறப்புத் திருப்பெயர்கள்.)

கூவாமற் கூவும் குயில்கள் குரலோசை
தேவாரம் போல்நன்கு தித்திக்கும் – நாவார
பேசும் கிளிக்கூட்டம் பெம்மான் புகழ்தென்றல்
வீசும் அருள்ஞான மே. (2)

(பெம்மான் – சுந்தரேசுவரப் பெருமான்.)

சைவப் பதிசான்றோர் தாங்கும் பதிசற்றும்
பொய்யிற் பதியன்பாற் பூசுகின்ற – தெய்வத்
திருநீறு போன்ற திருவுள்ள மக்கள்
பரவும் பதிகாரை பார். (3)

ஆமேயும் புற்றரைகள் ஆடுறையும் நீர்க்கரைகள்
பூமேவும் வண்டுப் புனற்சோலை – நாவூறும்
நற்கனிகள் நன்செய்புன் செய்நிலங்கள் நாற்புறஞ்சூழ்
பொற்பதியாம் காரைப் பொழில். (4)

(ஆ – பசு. நன்செய்நிலம் – நெல்வயல்கள் உள்ள நிலம். புன்செய்நிலம் – குறைந்த மழையில் விளையும் தானிய நிலங்கள்.)

இவ்வூர் இலகடியார் ஏத்தும் வலந்தலையில்
செவ்வேள் விசுவலிங்கச் செம்மனத்தார் – இவ்வுலகில்
பேரருளால் வந்து பிறந்தார் சிவபெருமான்
சீர்பரவ என்றே தெளி. (5)

தந்தை திருத்தில்லை யம்பலமும் தாயான
சந்த மிகுவிரா சம்மாவும் – சிந்தை
மகிழ்ந்தே மகனை வளர்த்தார் சிவனைப்
புகழ்ந்தே வரத்தைப் புரிந்து. (6)

(சந்தம் மிகுவிராசம்மா – அழகு மிகுந்த இராசம்மா. வரத்தைப் புரிந்து – மகனின் பிறப்பு சிவபெருமான் தந்த வரம் என்பதை விளங்கி.)

ஆதியின்றி அந்தமின்றி ஆளும் சிவனேநீ
சோதியனே நம்சுந்த ரேசனென்றே – காதலுடன்
தாயார் இராசம்மா தாலாட்டித் தான்பெற்ற
சேயைச் சிவமாக்கி னார். (7)

(சுந்தரேசன் – சுந்தரேசுவரர்)

கல்வியிலே வல்லவராய் காரியத்தில் கண்ணியராய்
நல்லொழுக்க நாகரிக முள்ளவராய் – எல்லவரும்
போற்ற வளர்ந்தார் விசுவலிங்கப் பொன்மனத்தார்
ஊற்றுப் பயிர்போல் உயர்ந்து. (8)

தந்தை குறிப்புணர்ந்தும் தாயின் விருப்பறிந்தும்
மைந்தர் பிறப்பின் மதிப்புணர்ந்தும் – சிந்தை
சிவன்பாலே வைத்தன்புச் சித்தாந்தச் செம்மை
தவத்தாலே கண்டார் தக. (9)

பல்கலைக் கழகத்து விஞ்ஞானப் பட்டமுடன்
கல்வி புகட்டும் கலைச்சான்றும் – வெல்லுமதி
வல்லமையால் பெற்று மதிப்பார் விசுவலிங்கம்
நல்லா சிரியரா னார். (10)

நீறிருக்கும் நெற்றியிலே நெஞ்சத்தில் அன்பென்னும்
ஆறூறி மாணவரை ஆளாக்கும் – பேறெனவே
ஆசிரிய மேன்மைத் தொழிலுக் கழகுசெய்யும்
வாசமலர் ஆனார் மகிழ்ந்து. (11)

சாகுண் ணியமூர்த்தி தாங்கும் அராலியதன்
நாகலிங்கம் தம்பதியர் நன்குபெற்ற – வாகார்
வடிவழகாம் பாளை மணந்தார் விசுவலிங்கம்
வடமீனைப் பார்த்து மகிழ்ந்து. (12)

(சாகுண்ணியமூர்த்தி – அராலிப்பதியில் அருள்பாலிக்கும் சிவபெருமானின் திருப்பெயர். நாகலிங்கம் தம்பதியர் – தந்தை நாகலிங்கம் தாயார் முத்துமாரி. வாகார் – அழகுள்ள. வடமீன் – அருந்ததி.)

மட்டில் திறனார் மனைபல் கலைக்கழகப்
பட்டம் பலபெற்ற பாவையதால் – ஒட்டியுள்ள
மாசகற்றி மாணவரை வாழவைக்கும் பேசரிய
ஆசிரிய ராவார் அறி. (13)

(மனை – மனைவி – வடிவழகாம்பாள்.)

அன்பாளர் நல்ல அறிவாளர் தற்கொண்டான்
இன்பாளர் ஆற்றல் இயல்பாளும் – பண்பார்
வடிவழகாம் பாளின் மனத்துள் மகிழ்ந்து
குடியிருக்கும் மேன்மைக் குணம். (14)

(தற்கொண்டான் – கணவன்.)

இருந்தோம்பி இன்புற்ற இல்லறத்தில் செய்த
பெருந்தவத்தால் தம்பதியர் பெற்றார் – அருந்திறத்துச்
செல்வியாம் வாசுகியும் சீர்விசுவ பாரதியும்
நல்வடிவா னந்தனையும் நன்கு. (15)

அறிவறிந்த பிள்ளைகளை அன்பால் வளர்த்து
நிறைகுடங்க ளாக்கிநல் நீதி – நெறிவழியில்
தாழ்வில்லாக் கல்வித் தனமளித்துப் பெற்றோரும்
வாழ்வாங்கு வாழவைத் தார். (16)

பசுமரத்தில் ஆணி அறைகின்ற பாங்கில்
விசுவலிங்கம் தம்பதியர் மிக்க – இசைவாக
மாணவர்க்குக் கல்வி வழங்கும் பணியாற்ற
வாணியருள் செய்தாள் மகிழ்ந்து. (17)

பாகற் கணிதத்தைப் பக்குவமாய் விசுவலிங்கம்
பாகாக்கிக் கற்பிப்பார் பற்றுடனே – மேகத்தைக்
காணும் மயில்போல் அதனைக் களித்தெல்லா
மாணவரும் கற்பார் மகிழ்ந்து. (18)

(பாகற் கணிதம் – (பலருக்குப்) பாகற்காய்போற் கசக்கும் கணிதம்.)

கணித முடிச்சுகளைக் கட்டவிழ்க்க வல்ல
இணையில் விவேகியிவர் என்றே – திணைக்களமும்
அங்கீ கரித்ததால் கல்வி அகிலத்தில்
சிங்கேறு போலானார் தேர். (19)

இதமாய்க் கணிதம் எளிதாகக் கற்கப்
பதினைந்து நூல்கள் படைத்த – மதிவாணர்
கல்விக்குச் செய்த கருதரிய சேவையினை
பல்லக்கில் ஏற்றியதிப் பார். (20)

(ஏற்றியதிப் பார் – ஏற்றியது இப் பார்; இப் பார் – இந்த உலகம்.)

மன்னர் விசுவலிங்கம் மாண்பார் மனைவியுடன்
இன்னல் பெருகும் இலங்கைவிட்டு – அன்னியமண்
நைசீ ரியாசென்று நற்கல்வி கற்பிக்கும்
தெய்வப் பணிசெய்தார் சேர்ந்து. (21)

முன்னுக் குயர முயல்கின்ற நாகரிக
நன்னாடு நைசீ ரியாநாடி – தன்னிகரில்
கல்வியினைக் கற்றுயரப் பெற்றவருக் குற்றபெரும்
நல்வர(வு) அளித்தார் நயந்து. (22)

ஆன்ற விரிவுரை யாளர் துறைத்தலைவர்
போன்ற பதவிப் பொறுப்புகளும் – ஊன்றிக்
கவனித்துக் கல்விப் பயிர்பேணிக் காத்தார்
தவமிக்க நாட்டில் தரித்து. (23)

சென்றுள்ள நாட்டுடனே செய்துள்ள ஒப்பந்தம்
நன்று முடிவடைய நன்னாடாம் – குன்றா
வளமார் கனடாவை வந்தடைந்தார் கண்ணைக்
குளமாக்க ஈழத் துயர். (24)

தாய்நாடே யார்க்கும் தலையான நாடாகும்
தாயன்பே யார்க்கும் தலையன்பாம் – தாய்மொழியே
இன்ப மொழியாகும் ஈதே அனுபவத்தால்
மன்பதையார் கண்டறிந்த மாண்பு. (25)

ஆன வகையால் அறிஞர் விசுவலிங்கம்
தானேமுன் நின்று தமிழ்சமயம் – மேன்மையுற
சென்றவிட மெல்லாம் திடமாகச் சிந்தித்து
நன்றாய் உழைப்பார் நயந்து. (26)

கனடாவில் கல்விக் கழகம் அமைத்தே
கனிவாய் உயர்கல்வி கற்க – முனைகின்ற
பாடறியா மாணவர்க்கு விஞ்ஞான பாடங்கள்
கூடிவரச் செய்தார் குழைந்து. (27)

(கழகம் – திருவள்ளுவர் கல்விக் கழகம். பாடறியா மாணவர் – அகதிகளாக வந்தமையால் நாட்டு நடப்பறியாத மாணவர். கூடிவர – ஒத்துவர, கற்றுத் தெளிய. குழைந்து – அன்பு காட்டி.)

பெரியார் எனப்படுவோர் கண்டுபிறர் பேசும்
திருவார் கருமங்கள் செய்வார் – உரிமைடன்
ஒன்றிக் கனடாவில் ஓர்சைவ சிந்தாந்த
மன்றம் அமைத்தார் மகிழ்ந்து. (28)

சைவம் தழைக்க தமிழ்தழைக்கத் திட்டமிட்டே
ஐயன் மனையோ(டு) அருந்தமிழர் – உய்ய
சமயகுர வர்பாட சாலையதாற் கல்வி
அமைவுறவே கற்பித்தா ராம். (29)

சைவம் தமிழ்க்கல்வி சார்பண் ணிசைமற்றும்
உய்யும் ஒழுக்க உயர்நெறியும் – தெய்வ
அருளாற் படிப்பித்தார் ஆசிரியர் உற்ற
கருணையுடன் மாணவர்க்குக் காண். (30)

அன்பு நெறியென்னும் ஆன்ற மாதவிதழ்க்(கு)
அன்பு மனைவிபுகழ் ஆசிரியர் – நன்கு
முதியோர் சிறுவர் முகந்தோங்கத் தக்க
நிதியாகும் அன்பு நெறி. (31)

(முகந்தோங்க – முகந்து ஓங்க, முகத்தல் – தோய்ந்து எடுத்தல், இங்கே அன்பு நெறி இதழைப படித்து அறிவால் உயர்தல் என்னும் பொருளில் வந்தது.)

திருவருட் செல்வருக்(கு) ஆண்டாண்டு செய்யும்
பெருவிழா பல்லோரும் பேசும் – அரியவிழா
சைவம் தமிழ்வளர்ந்து நாளை தழைக்குமென
ஐயமின்றிக் காட்டும் அது. (32)

விவேகா னந்தசபைத் தேர்வு விவரம்
நுவலுமாம் நூற்றுக்கு நூறு – தவஞ்செய்த
மாணவரால் சைவத் தமிழ்வளரும் மாண்புறவே
நீணிலத்தில் என்றும் நிலைத்து. (33)

செம்மைப் பொருள்கள் குறித்த திருநூல்கள்
தம்மை வெளியிட்டுச் சைவத்தின் – உண்மை
சிறியோர் பெரியோரைச் சேரச்செய் கின்ற
நிறைவுக்கிங் கேது நிகர். (34)

குற்றுயிர்க்கு நன்மருந்தோ கும்மிருட்டுச் சூரியனோ
வற்றும் குளத்துக்கு மாமழையோ – உற்றசிவ
வேதம் வளர்க்கும் விசுவலிங்கர் தொண்டுக்கிங்(கு)
ஏதோ உரைப்பன் எதிர். (35)

சைவத்தைச் சைவத்தில் சைவத்தாற் கற்பிக்கும்
சைவர் விசுவலிங்கச் சான்றோன் - தெய்வத்தை
தெய்வத்தாற் காட்டும் திறத்தால் இவருமொரு
தெய்வந்தான் என்பார் தெளிந்து. (36)

உற்ற பிறப்பின் பயனை உணர்ந்தறிந்தார்
வெற்றி யளிக்கும் விசுவலிங்க - கற்றாரும்
சூழ்வார்க்குத் தொண்டு துணிந்தாற்றி இம்மண்ணில்
வாழ்வாங்கு வாழ்வார் மகிழ்ந்து. (37)

சித்தம் தெளிந்த திருத்தொண்டர் போன்றுள்ள
பத்தர் பலர்பண்புச் சைவ - சித்தாந்த
மன்றத்திற் சேர்ந்து வளர்ச்சிக் குழைக்கின்றார்
என்றுமிவர்க் கில்லை இணை. (38)

மன்றமுடல் என்றால் வடிவழகு தானுயிராம்
என்றும் மதிவிசுவ லிங்கமின்னும் - ஒன்றும்
உறுப்புக்கள் தொண்டர் ஒருகுறையும் இல்லைச்
சிறப்பாகும் சைவம் செழித்து. (39)

(வடிவழகு - வடிவழகாம்பாள்.)


வாழி விசுவலிங்கத் தம்பதிகள் மாண்புறவே
வாழிசைவ சித்தாந்த மன்றமென்றும் - கேழில்லா
திண்ணபுர நாதர் திருவருளால் தேகநல
வண்ணமுடன் வாழ்க மகிழ்ந்து. (40)

(கெழில்லா - உப்பில்லாத.)

## நூற்பயன்

விசுவலிங்க வெண்பாக்கள் தம்மை விரும்பிக்
கசிவுடனே நன்குணர்ந்து கற்பார் – இசைபெறவே
சைவம் வளரத் தமிழோங்கத் தொண்டாற்றி
உய்வார் உலகில் உயர்ந்து.

(இசை – புகழ்.)
விசுவலிங்க வெண்பா
முற்றும்.



# ஈழத்துச் சிதம்பரம்
# இராச கோபுரம்